gistered as a News
paper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஉ புரட்டாதிமீ ககஉ (1946 செப்டெம்பர் 27 வெள்ளிக்கிழமை) [இல சகூ

## திருநின்ற செம்மை

வித்துவான் க. வெள்ளைவாரணர்
(அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர்)

(முற்றொடர்)

மேற்கூறிய திருவென்னும் பொதுமை நிலையழகு உலகியற் பொருள்களில் விளங்கித்தோன்றுங்கால் அஃது என்றும் ஒரே நிலையில் நிலைத்துத் தோன்றுவதில்லை. நமது சுட்டுணர்வுக்கு விளங்கித்தோன்றும் பொருள்கள் யாவும் அழியுமியல்பினவாதலின் அப்பொருளின்கண் நம்பொறிகளால் அறியப்பெற்ற அழகு எக்காலத்தும் ஒரே நிலைமையில் நிலைபெறுதல் இயலாது. பொறிவாயிலாகக் காண்கின்ற பொருள்கள் அனைத்தும் ஒவ்வொரு காலத்தும் நிலைபேறின்றி அழிந்து மாறுபடுவன என்பர் அறிஞர். எனவே, நம்பொறிவாயிலாகக் காண்கின்ற வனப்பனைத்தும் என்றாவது ஒருநாளில் அழிந்துபோ மியல்பினவே என வுணர்தல் வேண்டும். நிலைபேறுடைய உயிர்களின் உள்ளுணர்விற் றோன்றும் திருத்தகவிற்றாகிய உள்ளநிகழ்ச்சியும் மக்களது சுட்டுணர்வைச் சார்ந்து நிற்றலால், நிலைபேறுடையதன்றாம். சுட்டியுணரத்தக்க உயிர்களின் உள்ளம், எஞ்ஞான்றும் யாண்டும் ஒரேநிலையிலமைந்து தோற்றும் நிலைபேறும், தூய்மையும், நிறைவும் குறைவின்றி நிரம்பப்பெறுமையின், அத்தகைய மாறுதலுடைய உளளத்திற் றோன்றிய திருவென்னும் உணர்வும் என்றும் பொன்றாத நிலைபேறுடையதெனச் சொல்லுதற்கு இடமில்லை. ஆகவே மேற்காட்டிய திருவென்னும் ஆக்கம், என்றும் மாறாதநிலைபெறுதற்கு ஏற்றபொருள் யாது எனப் பண்டைப் பெருமக்கள் ஆராய்வாராயினர். திருவென்பது ஒருபண்பு அது நிலைபெறவேண்டுமானால், அதற்கு நிலைக்களனாகிய பொருள் என்றும்மாறாத நிலைபேறுடையதாக இருத்தல்வேண்டும. நேர்மையும் நெடுமையும் உடைய பொருளே நிலைபேறுடைய பொருளாகும். இந்நிலைபேற்றினைச் செம்மையெனவும் வழங்குவர். உண்மையும் தூய்மையும் உடையதாகி எஞ்ஞான்றும் விகாரமின்றி ஒரு தன்மைத்தாய் விளங்கும் பொருளியல்பே செம்மை யெனப்படும். இம் மூவகை யிலக்கணமும் ஒருங்கே யமைந்த நற்பொருளாகிய அறத்தினையும், அவ்வறத்துடன் பிரிப்பின்றி யொன்றியுள்ள அறவாழி அந்தணனாகிய இறைவனையும் ஆசிரியர் திருவள்ளுவனார் 'செம்பொருள்' என வழங்குகின்றார். செம்மையுடைய பொருள் செம்பொருள் எனப்படும். செம்மை யென்பதனை நடுவுநிலைமை நேர்மையென்ற பொருளில் தெய்வப் புலவர் வழங்குகின்றார். "சொற்கோட்டமில்லது செப்பம்" "யாழ்கோடு செவ்விது" என வருந் திருக்குறட் சொற்றொடர்களால் இஃதுணரப்படும்.

மெய்யுணர்ந்தார் நெஞ்சிற்கெல்லாம் அறம் நேர்மையுடையதாய் நிலைபெறுதலின், அறத்தினைச் செம்பொருள் என்றார் என்பர். இறைவனாகிய முழுமுதற் பொருள் தனக்குத் தோற்றமும் கேடும் இல்லாமையால் நிலைபேறு உடையதாகியும், தனது நேர்மையால் தன்னை யொருபொருளும் ஊடுருவிக் கலத்தலில்லாதபடி செறிந்து திணிந்துநிற்றலால் தூய்மையுடையதாகியும், தான் உலகப் பொருள்களெல்லாவற்றையும் ஊடுருவிக் கலந்து நிற்றலால் நீக்கமற்ற நிறைவுடையதாகியும், என்றுந் திரிபின்றி ஒரே நிலையில் நிற்றல்பற்றி அதனைச் செம்பொருள் எனக் கூறினர் திருவள்ளுவர் எனப் பரிமேலழகர் தம் உரையில் நன்கு விளக்குகின்றார்.

இங்ஙனம் தெய்வப் புலவர் திருவள்ளுவனாரால் செம்பொருள் எனத் துணிந்துரைக்கப்பெற்ற நற்பொருள் இறைவனாகிய முழுமுதற் பொருளே யென்பதனைத் திருவாதவூரடிகள், "செம்பொருட்டுணிவே" எனவும், "செம்மையேயாய சிவபதம்" எனவும் வரும் மணிமொழிகளால் இனிது விளக்கியருளுதல் காண்க. மாறாத நிலைபேறும் தூய்மையும் நீக்கமற்ற நிறைவும் கொண்ட முழுமுதற் பொருளை யாதாரமாகக் கொண்டல்லது திரு நிலைபெறுதல் இயலாது. மேற்கூறிய செம்பொருளை யாதாரமாகக் கொண்டு நிலைத்து நிற்பதெதுவோ அதுவே நிலைபெற்ற திரு எனப் போற்றப்படுவதாம். எல்லா இன்பங்களுக்கும் மேலதாகிய வீடுபேறென்னும் பேரின்பப் பெருவாழ்வாகிய திருவென்பது செம்பொருளாகியசிவபிரானது திருவடியினையே ஆதாரமாகக் கொண்டு நிலைத்து நிற்பதென்பார், சேர முனிவராகிய இளங்கோவடிகளும் அப்பெருமானது திருவடியினை யே ஆதாரமாகக் கொண்டு நிலைத்து நிற்பதென்பார், சேர முனிவராகிய இளங்கோவடிகளும் அப்பெருமானது திருவடியினைத் "திருநிலைச் சேவடி"யெனச் சிறப்பித்துப் போற்றுகின்றார். திருநிலைச் சேவடி — எல்லாச்செல்வங்களும் நிலைத்துநிற்றற்கு நிலைக்களனாகிய செவ்விய திருவடி யென்பது அத்தொடரின் பொருளாகும். என்றும் பொன்றாத திருவுடையான் இறைவன் ஒருவனேயென்பதனைத் "திருவுடையார்" "சென்றடையாத திருவுடையானை" என ஆளுடைய பிள்ளையாரும், 'திருவேயென் செல்வமே' 'ஏரிநிறைந்தனைய செல்வன் கண்டாய்' என ஆளுடைய அரசும், "பொன்னுமெய்ப் பொருளுந் தருவானைப் போகமுந் திருவும் புணர்ப்பானை" என ஆளுடைய நம்பியும், இவ்வாறே பிற சான்றோரும் தெளிய அருளிச் செய்துள்ளார்கள் எல்லாச் செல்வங்களையும் வரம்பிலின்பத்தையும் முற்றுரிமையாகக் கொண்டு உயிர்கட்கு இத்தகைய திருத்தகவிற்றாகிய தண்ணருள சுரக்கும் இறைவனைத் திருவாளன் என்ற சொல்லால் சேக்கிழார் பெருமான் பாராட்டிய திறமும் இவண் நினைத்தற்குரியதாம்.

திருவின் நிலைக்களனுப் விளங்கும் செம்பொருள் ஆகிய முழுமுதற் பொருள் உயிர்க்குயிராய் நின்று அறி

தொடர்ச்சி 4-ம் பக்கம்

### ஓம் சக்தி!

நம்புவதே வழியென்ற மறைதன்னை
நாமின்று நம்பிவிட்டோம்
கும்பிட் டெந்நேரமும் 'சக்தி' யென்றுனைக்
கும்பிடுவேன் மனமே
அம்புக்கும் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்
அச்சமில்லாதபடி
உம்பர்க்கும் இம்பர்க்கும் வாழ்வுதரும்பதம்
ஓம்சக்தி! ஓம்சக்தி! ஓம்.

—பாரதி

## நவராத்திரி

(பண்டிதர் சு. இராமசாமி வியாவிற் சைவவித்தியாசாலை)

இவ்வருடநவராத்திரி விழாவானது வியாழக்கிழமை தொடக்கம் அடுத்த வெள்ளிக்கிழமை 26-9-46 4-'0-46 முடியவுள்ள ஒன்பது இராத்திரிகளிலும்செய்யப்படும் சிறப்புகளும், அடுத்தநாளாகிய விஜயதசமியில் நடக்கும் மகிஷாசுரமர்த்தனமாகியவிழாவுடன் சேர்த்து தசரா எனவழங்கப்படுவதுமாகும். இது வடஇந்தியாவில்துர்க்காபூசை என்ற பெயருடனும், மைசூரில் தசரா உற்சவம் என்ற பெயருடனும், மற்றைய விடங்களில் நவராத்திரி என்னும் பெயருடனுங் கொண்டாடப்படும். தென்னிந்தியாவில் சைவ வைஷ்ணவ சமயத்துப் பெண்கள் தம் வீடுகளில் அம்மன் விக்கிரகத்தை அமர்த்தி, பொம்மைகளை அடுக்கி அலங்கரித்து, கொலு என்ற பெயரோடு இவ்விழாவைக் கொண்டாடுவார்கள். இவ்விழாவானது பண்டைநாட்டொட்டுவழங்கி வழங்கிவருவதும், சிறந்த தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதுமாகும். அத்தத்துவத்தை எண்டுத்து விளக்கின் இதிலே ஆர்வங்கொண்டவர்களுக்கு மிகுந்த ஆர்வமுண்டாதலும் அவநம்பிக்கை கொண்டவர்களுக்கு நீங்குதலும் ஒரு தலையாதலின் ஒரு சிறிது விளக்குவாம்.

சகல உயிர்களும் உயிர் வாழ்வதற்கும், வாழ்க்கையை இன்பமாகக் கழிப்பதற்கும், சுகமும் பெலனும் இன்றியமையாது வேண்டப்படுவன. மனிதனைத்தவிர வேறெந்தப் பிராணியும் தனக்குரிய தேவைகளுக்கு மற்றப் பிராணிகளின் உதவியை நம்பியிருப்பதில்லை. ஒவ்வொன்றும் தன்தன் சக்தியிலேயே நம்பிக்கை கொண்டிருக்கின்றன. உணவைத் தேடுவதற்கும், பகையினின்று தப்புவதற்கும், இன்பத்தை அனுபவிப்பதற்கும் அவர்களுடைய வலிமையே உதவி செய்கின்றது. பண்டைக்கால மக்களும் வலிமையை அதாவது வீரத்தையே முதன்மையாக மதித்தனர். வீரர்களுக்கே அரசும், பொருளும் அழகிய பணிவியும் முதலாயின சொந்தமாகக் கருதப்பட்டன. இதனாற் சகல பிராணிவர்க்கங்களுக்கும் பொதுவாக வேண்டப்படுவது சக்தியே. அதாவது வீரமே.

சுகமும் பெலமும் இருப்பதற்கு உணவும் உடையும் இருப்பிடமும் மனிதனுக்கு அவசியமானவை. இவைகளை யடைவதற்குச் செல்வம் இன்றியமையாதது. மனிதன் தன் வாழ்க்கையை இனிமையாகச் செய்வதற்குரிய தேவைகளைத் தேடுவதற்குப் பொருள் கருவியாக இருக்கின்றது. இப் பொருளைச் சம்பாதிப்பதிலேயே மனிதர் கண்ணுங்கருத்துமாயிருக்கின்றனர். ஆகவே சுகம் பெலம் அடைவது பொதுவாகவும், செல்வத்தைத் தேடுவது மனிதருக்குச் சிறப்பாகவும் இருக்கின்றது. இப்பொருளின் சிறப்பை "பொருளிலார்க்கிவ்வுலகமில்லை" என்று திருவள்ளுவரும், "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னான் முடியும்" என்று மாணிக்கவாசகரும் கூறிப் போந்தவற்றால் அறியலாகும்.

இனி, சுக பெலத்தோடு பொருளையும ஒருவன் அடைந்திருப்பதனால் அவன இன்மை மறுமைப் பயன்களையடைந்துவிடுவானா? அறிவில்லாதவனிடத்திலே வீரமும் பொருளும் சேருமாயின் அவை பெரிய நன்மைக்குப் பதில் அதிக தீங்கைவிளைப்பன ஆகும் வறுமை கொடியது; துன்பந் தருவதுதான். ஆயின் அவ்வறுமை அறிவாளிகளிடத்திற் செய்யுந் துன்பத்தைப் பார்க்கிலும் அறிவில்லாதவனிடத்துள்ள செல்வம் பலமடங்கு துன்பத்தைச் செய்வதாகும். திருவள்ளுவரும் "நல்லார்கட்பட்ட வறுமையின் இன்னாதே கல்லார்கட் பட்ட திரு" என்றார். ஆகவே, செல்வம் வீரம் முதலியவற்றால் ஒருவன் வாழ்க்கையை இனிமைப்படுத்த வேண்டுவனாயின் அவன் அறிவுடையோனாயிருக்க வேண்டும். அறிவைத் தருவது கல்வியே. ஆகவே, வீரம் செல்வம் கல்வி என்னும் மூன்றும் இரலே ஒன்றினொன்று சிறந்து மனிதருக்கு இன்றியமையாதனவாயின. இம் மூன்றினுடைய இன்றியாமையை உணர்ந்த மக்கள், இவைகளைத் தரும்படி கடவுளின் திருவருளை வேண்டுகின்றனர். இத் திருவருள் சத்தியென்று வழங்கப்படும். சத்தியொன்றாயினும் அது கொடுக்கும் விஷய பேதம்பற்றிப் பலவாறு கூறப்படும்.

முதலாவதாயுள்ள வீரத்தையளிக்கும்படி 'துர்க்கை'என்னும் சத்தியை வேண்டுகின்றனர். ஒன்பது இராத்திரிகளில் முதன் மூன்று இராத்திரிகளையும் துர்க்கைக்குரிய விழா நாட்களாகவும் அடுத்ததாகவுள்ள செல்வத்தை அளிக்கும்படி 'இலட்சுமி' என்

தொடர்ச்சி 4 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியவரு
புரட்டாதிமீ ௧௧௨ வெள்ளிக்கிழமை


## நவராத்திரி காலத்தில் தேவியைப் போற்றுக



"சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத் தென்னை எடுத்தா
அங்கயற்கண் எம்பிராட்டி [ண்ட
அரும்புஇள நகைபோற்றி ஆரணநூ
புரஞ்சிலம்பும் அடிகள் போற்றி"

அகில அண்டங்களையும் ஆக்கிய அன்னையே! அவ்வண்டங்கள் தோறுமுள்ள சராசரங்களையெல்லாம் அருளிய தாயே! ஐங்கரனும் அறுமுகனும் 'அம்மையே' என்றழைக்கும் உலகமாதாவே! இந்த நவராத்திரி காலத்திலே, உன் திருவருள் வெள்ளமானது கடல்போலப் பெருகுமாமே! அப்படிப் பெருகும்போது, அத்திருவருட் பெருக்கிலே, உன் மக்களாகிய மனிதருந் தேவரும் மாயா முனிவரும் மற்றுமுள்ள உயிர்களும் கிடந்து திளைத்து ஈடேறுமாமே! இது மெய்தானா? உமாதேவி, ஈசுவரி, மகேசுவரி, புவநேசுவரி, மனோன்மனி, அகிலாண்டேசுவரி, இலக்குமி, சரசுவதி, துர்க்கை, சாமுண்டி, மாகாளி என்று பல நாமங்களாற் சொல்லுவதும், எமையாள் உமையே! உன்னைத்தானமே, அது உண்மைதானா?

இவை மாத்திர மல்லாமல், காசியில் விசாலாட்சியென்றும், காஞ்சியிற் காமாட்சியென்றும், மதுரையில் மீனாட்சியென்றும், சிதம்பரத்திற் சிவகாமியென்றும், திருவண்ணாமலையில் உண்ணாமுலையாளென்றும், திருக்காளத்தியில் ஞானப்பூங்கோதையென்றும், சீகாளியிற் பெரியநாயகியென்றும், இந்த இலங்கையிலே பாலாம்பிகை பருவதவர்த்தனி நகுலேசுவரி தையனாயகி சாந்தநாயகி யென்றும் வெவ்வேறு திருநாமங் கொண்டு இறையவர் இடப்பாகத் தமர்ந்து ஆன்ம கோடிகளுக்குத் திருவருள் செய்து வருகின்றாயாமே! தாயே! இது நிசந்தானா?

சகல உலகங்களையும் பெற்றவளே! சங்கரன் பாகத்தில் உற்றவளே! நீ, காஞ்சிபுரத்திலே ஏகாம்பரநாதன் படியாய்அளந்து தந்த மூன்று படி நெல்லைக் கொண்டு, அந்தநாளில் முப்பத்திரண்டு தருமங்களையுஞ் செய்தாயென்று புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது; அந்தக் கதையை நான் மெய்யென்று நம்பி, அரைகுறையாய் ஆங்கிலம் படித்து விபரீத நாகரீகத்தையுங் கைக்கொண்ட இக்கால யுவர்களுக்குச் சொன்னேன். "உந்தக் கதை எங்கேயிருக்கிறது" என்று அவர்கள் என்னை அதட்டிக்கேட்க, நான் புராணத்திற் சொல்லப்பட் டிருக்கிறது என்றேன்; அதற்கு அவர்கள் என்னைப் பார்த்து "புராணக் கதையை நம்பும் புத்திகெட்ட மானுடனே, மூன்று படி நெல்லைக் கொண்டு மூப்பத்திரண்டு அறங்களைச் செய்வது அசம்பாவிதம்" என்று சொல்லி எனக்கு மௌட்டீகம் கற்பித்துவிட்டார்களம்மா? நான் சொல்வது நிசமென எடுத்துக்காட்ட அந்த நேரத்தில் எனக்கு ஏது ஒன்றும் புலப்படாமையால், நாணத்தோடு தலை குனிந்தபடி அந்த இடத்தை விட்டு அகன்று விட்டேன்; ஆனல், எங்கள் ஆத்தாளே, அபிராமவல்லியே, அண்டமெல்லாம் பூத்தாளே, இந்த நேரத்திலே உன் செயல் நிசமென்பதற்குச் சிறந்த ஏது ஒன்று பிரத்தியட்சமாய் அகப்பட்டுவிட்டது.

தாயே! நீ அந்தநாளில் மூன்று படி நெற்கொண்டு முப்பத்திரண்டு தருமங்களைச் செய்தது ஒரு நூதனமல்ல, அசம்பாவிதமான கருமமுமல்ல, அம்மையே! எங்கள் நாட்டிலே, அதிகாரிகள் வாரத்திற்கொருமுறை மூக்காற்படி (சத்தற்ற) வெள்ளையரிசியைத்தந்து எங்களை வளர்த்து வருகிறார்களே; பல கோடிக் கணக்கானமக்களைச் சீராக வளர்த்துச் சாகாமற் பாதுகாத்து வருகிறார்களே! தாயே!கேட்கிறேனென்று சினங் கொள்ளவேண்டாம், நீ செய்யுந் தருமமா? எங்கள் அதிகாரிகள் செய்யுந்தானமா சிறந்தது? கூசாமற் சொல்லம்மா.

அன்னையே! இன்னமும் பராமுகம் ஏன் அம்மா? நாங்கள் உலகமாதாவாகிய உன்னை மறந்து உன்னைப் பூசியாத உலுத்தராய்க் கெட்டுப் போனோமென்பது மெய்; ஆனல் அண்டமெல்லாம் பெற்றவளே! பிள்ளைகள் அறியாமையினாலே தவறுசெய்தாலும், தாயான நீயல்லவோ பிள்ளைகளை அணைத்து ஆதரிக்கக் கடன் பூண்டவள்; பொல்லாத சேயெனில் தாய் தள்ளல் நீதியோ? புகலிடம் பிறிதுமுண்டோ? தாயே, பெற்றமனம் பித்தும் பிள்ளை மனங் கல்லும் என்றும், கன்று துள்ளிப் பசுவில் வீழ்தலுண்டு என்றுஞ் சொல்லுவர்; உன் பிள்ளைகள் செய்யும் அபராதங்களைப் பொறுத்தருள் செய்யம்மா? இந்த நாட்டிலே எங்களூரிலே பத்துமாச காலமாகப் பெருமழை யில்லை அம்மா ஏழைகள் சிந்துங் கண்ணீரேயொழிய, கிணறு குளங்களிலே தண்ணீருமில்லை தாயே; உன் கருணை வெள்ளப்பெருக்கில் ஒரு துளியை இங்கே சிந்தினால், ஊனை வாயினின்றுந் தவறிய உணவைக் கொண்டு ஆயிரகோடி எறும்பு உண்டு உயிர்வாழுமென்ற பிரகாரம், அந்த அமிர்தத் துளி எங்களுக்குப் பெருமழையாகப் பயன்படுமம்மா? மகாதேவியே! பெற்ற பிள்ளையைத் தகப்பன் புறக்கணித்தாலும், பராமுகஞ் செய்தாலும், தாய் கைவிடமாட்டாளம்மா? அப்படியிருக்க, தாயாகிய நீ கைவிட்டால், பராமுகஞ் செய்தால், தந்தை எங்களையிட்டுச் சிந்தனை செய்வாரா? வேயீன்ற முத்தற்கும் விண்ணவர் கோவுக்கும் வேதனுக்கும் நாயேன்றனக்கும், பதினாலுலகுக்கும் நாயகியாயுள்ள தாயே! அரிசி குற்றி விற்பவர் வீட்டிலே, வாய்க்கரிசியில்லாமற்போயிற்றென்றவாறு, தாயே! உன்னுடைய திருவருட் பெருக்கத்திற்குரிய நவராத்திரி காலமாகிய இந்தக் கிழமையிலே இங்குள்ள மக்களுக்குக் கிடைத்து வந்த உணவுப் பொருளுங் குறைந்து விட்டதம்மா? பசியினால் இங்குள்ள மக்கள் படும் பரிதாபத்தையும் விடுங் கண்ணீரையும் பார்க்கச் சகியோம்! ஆதலால், ஆச்சி! எங்களைப் பாதுகாத்து வருள் புரிதல் உன்மேற் பாரம் அம்மே!

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—118)

## "நாளைக்குத் தெரிவிப்போம்"

இராமச்சந்திரன் மீண்டு வந்து இங்கிதத்தின் பொருட்டுத் தான் சென்று தலைமை யாசிரியருடன் பேசிய விஷயம் சித்தியாகும்போலும் என்று சொல்லியபோது, அவனுடைய அபிமானப்பிதா இரஞ்சிதம் விசுவநாதன் விசாலாட்சி இங்கிதம் ஆகிய எல்லாருஞ் சந்தோஷமடைந்தார்கள்; குறித்த தினம் வருதலும், இங்கிதம், இங்கிதத்துக்குப் பெண் துணையாக விசாலாட்சி, அந்த இருவருக்கும் ஆண் துணையாக இராமச்சந்திரன் என்னும் மூவரும் புறப்பட்டு ஒரு இரதத்தில் ஏறிக்கொண்டு மேற்படி கலாசாலைக்குச் சென்றார்கள் அங்கே தலைமையாசிரியர் அவர்களனைவரையும் உபசரித்து இருக்கச் செய்தார். சங்கீதம் பரதநாட்டியமென்னுங் கலைகளில் வல்ல நிபுணைகள் சிலர் அங்கே பரீட்சைக்காக வந்திருந்தார்கள். இங்கிதத்துடன் இன்னும் ஐந்து பெண்கள் குறித்த உத்தியோகத்தின் பொருட்டு விண்ணப்பஞ் செய்தவர்கள் அங்கு வந்திருந்தார்கள்; பரீட்சைக்குக் குறிக்கப்பட்ட நேரம் வருதலும் வித்தியாசாலையிலேயுள்ள ஒரு மண்டபத்திற் பரீட்சகர்களும் பரீட்சிக்கப்படுதற்குரியவர்களும் வந்து கூடினர்; தலைமையாசிரியர் இராமச்சந்திரனையும் விசாலாட்சியையும் அந்த மண்டபத்திற்கு அழைத்துக் கொண்டு போய் நிகழ்ச்சியைப் பார்க்கும்படி இருக்கச் செய்து தாமும் அயலில் இருந்தார்; பரீட்சை நேர்முகப் பரீட்சையாகவே நடந்தது; பரீட்சகர்கள் அங்கே வந்திருந்த பரீட்சார்த்திகளைச் சங்கீதத்திலும் பின் பரத நாட்டியத்திலும் ஒவ்வொருவராகப் பரீட்சித்து, ஈற்றில் இங்கிதத்தின் கலைத்திறமையைப் பரீட்சிக்கலாயினர்; இசையும் நாட்டியமுமல்லாமல் இங்கிதத்தின் விநயமான ஊடாட்டமும் இதமான வார்த்தையும் அந்தப் பரீட்சகர்களின் உள்ளத்தைக் கவர்ந்தன; அங்கு அந்த நேரஞ் சமுகமாயிருந்த மற்றைப் பரீட்சார்த்திகளும் அவளையும் அவள் கலைத் திறமையையும் பாராட்டினர் பரீட்சைத் தேர்தலையிட்டு "நாளைக்குத் தெரிவிப்போம்" என்று தலைமையாசிரியர், பரீட்சார்த்திகள் அனைவருக்குஞ் சொன்னார்; அவர்கள் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு போயினர்: இராமச்சந்திரன் இங்கிதம் முதலிய இவர்களை அந்தத் தலைமையாசிரியர் உபசரித்து, அவர்களுக்கும் விடை கொடுக்க, அவர்கள் இரதத்தில் ஏறிக்கொண்டு மீண்டு வீடு வந்து சேர்ந்தார்கள்.

## இங்கிதம் ஆசிரியையானமை

வீட்டிற்கு மீண்டவுடன், இராமச்சந்திரனை அவனுடைய அபிமானப்பிதா "என்ன மகனே, நீங்கள் போனகருமம் அநுகூலமாகுமோ" என்று வினவியபோது "அநுகூலமாகும்போற் புலப்படுகிறது, ஐயா" என்றான் இராமச்சந்திரன்; இரஞ்சிதம் இந்த விஷயமாக வினவியபோது விசாலாட்சியும் அப்படியே சொன்னாள்; கேட்ட அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள்; அடுத்தநாட் காலை 9 மணியளவில், குறித்த வித்தியாசாலையிலுள்ள சேவகன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து, இரஞ்சிதத்தின் மாமனாரிடங் கொடுத்தான்: அதில் அவர் மேற்பார்த்து குமாரி இங்கிதத்துக்குக் கொடுக்கவேண்டியதென்ற கருத்துப்பட வரையப்பட்டிருந்தது; உடனே அவர் இங்கிதத்திடம் அக் கடிதத்தை மகிழ்ச்சியோடு கொடுத்து "மகளே, இது உம்முடைய உத்தியோக நியமனக் கடிதம்போலும், திறந்து படித்துப் பார்த்துச் சொல்லும்" என்றார்; அதில் இங்கிதமே கலைகளிற் சிறந்தவளாகத் தேர்தல்பெற்றாளெனவும், அற்றைத் தினமே சுபதினமாயிருத்தலால் உடனே கடமையேற்பதற்குப் புறப்பட்டு வரவேண்டுமெனவும் கருத்துப்பட எழுதியிருப்பதைப் பார்த்தாள்; உடனே அக்கடிதத்தை விநயத்தோடுஇரஞ்சிதத்தின்மாமனாரிடங் கொடுக்க, அவர் அதனைப் படித்து மற்றையவர்களுக்குஞ் சொல்லி, இராமச்சந்திரனைத் தம் வீட்டிற்கு வரும்படி ஆள் அனுப்பினார்; இராமச்சந்திரன்உடனே அங்கேவந்துசெய்தியையறிந்து மகிழ்ச்சியடைந்தான்; முதநாட் போய்வந்த அந்த இரதத்தையே வரச்செய்து, இங்கிதத்தையும் அவள் வீட்டிலுள்ள ஒரு பணிப்பெண்ணையும் இரதத்தில் ஏறச்செய்து, தானும் ஏறிக்கொண்டு கலாசாலையையடைந்தான்; தலைமையாசிரியர் அவர்களை வரவேற்று, இங்கிதத்தை அவள் கலை பயிற்ற வேண்டிய வகுப்பிற் போயிருந்து சற்றுநேரம் படிப்பிக்கச் செய்து, அதன்பின் அங்குள்ள ஏனைய ஆசிரியர்கட்கு இங்கிதத்தையும், இங்கிதத்திற்கு ஏனைய ஆசிரியர்களையும் அறிமுகப்படுத்தி வைத்தார். தலைமையாசிரியருடைய அநுமதியோடு இங்கிதம் அன்று தன் நாட் படிப்பித்தலை முடித்துக்கொண்டு, இரதத்தில் வீட்டிற்கு மீண்டாள்; அடுத்தநாள் தொடக்கம், அந்தப் பள்ளிக்கூடத்திற் கல்வி பயிற்றும் ஒரு ஆசிரியையும் சில சிறுமியரும் போய்வரும் இரதத்திலேயே, இங்கிதமும் கலாசாலைக்குப் போய்வருதற்காகிய ஒழுங்கு செய்யப்பட்டது; அன்று முதலாக இங்கிதம் தன் கடமையைக் கிரமமாகத் திறமையோடு செய்துவருவாளாயினாள். அவளிடத்திற் கலைபயிலும் மாணவர்களும் ஏனைய மாணாக்கர்களும், அங்குள்ள ஆசிரியர்களுமாகிய எல்லாரும் அவள்மேல் அன்புபாராட்டி வருவாராயினர்; இங்கிதமும் அவர்களுடன் அப்படியே அன்பாக

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

## ஓர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை இற்றைக்கு 58 வருடங்கட்கு முன்னர் ஸ்தாபிதமானது. இதன் அறுபதாம் ஆண்டு நிறைவுவிழா வருகிற 1948-ம் ஆண்டு நிகழும். இந்த 60-ம் ஆண்டுப் பூர்த்தி விழாவிற்கு முந்தியே, இச்சபையின் நோக்கங்களையும் இயன்றவரை பூர்த்திசெய்தற்காகிய ஸ்தாபனங்களை யமைத்தல் ஏற்புடைத்தாகும்; இச்சபை ஆற்றி வரும் பல்வகைத் தொண்டுகளையும் இருந்து செய்தற்குச் சபைபேரில் ஒரு சிறந்த காரியாலயம் ஆவசியகம் அமைக்கப்படுதல் வேண்டும்; காலந்தோறும் குருபூசைகள் செய்தற்கும் சமயபாட வகுப்புக்கள் வைத்துநடத்துவதற்கும், பிரசங்கங்கள் காலந்தோறும் செய்யப்படுதற்கும், இன்னும் வேண்டிய காலங்களிற் கூட்டங்கள் கூடுவதற்கும், இன்னும் புத்தகசாலை, சபையாரால் அழைக்கப்படும் பெரியார் யாரும் தங்குவதற்கும், சந்தியாவந்தனம் ஆன்மார்த்த பூசை தெய்வவழிபாடு என்னுமிவைகளைச் செய்தற்கும் இன்ன பிறவற்றிற்குமாகிய மண்டபங்கள், அறைகள் முதலியனவற்றைக் கொண்ட ஒரு பெரிய ஆசிரமம் அமைக்க வேண்டுமெனவும, இப்படியமைத்தற்காகிய விஸ்தாரமுள்ள நிலத்தை இப்பொழுது விலைக்குவாங்கிக் காமங்களை உடனே தொடங்குதல் வேண்டுமெனவும், சென்றமாசங்கூடிய சைவபரிபாலன சபை வருடாந்த மகாகூட்டத்தில் நிர்ணயிக்கப்படலாயிற்று

மேற்படி நிர்ணயத்தின் பிரகாரம் சென்ற ஞாயிற்றுக்கிழமை(22-9-46) கூடிய நிர்வாகசபைக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் சைவப்பிரகாசயந்திர சாலைக்கணித்தாக, நீராவியடி நாற்சந்தியின் மருங்கில் பத்துப் பரப்பு வரை கொண்ட நிலம் வாங்குதற்காகிய ஒழுங்குகள் செய்யப்படலாயிற்று; மேலேசொல்லப்பட்டநிலத்தை வாங்குவதற்கும் சிறந்த ஆசிரமத்தை அமைப்பதற்கும்ஒருலட்சம்ரூபாவரையில் தேவையென மதிப்பிடப்பட்டிருக்கின்றது; சபை குறித்த நிதியின் பொருட்டுச் சைவாபிமானிகளாயுள்ள ஒவ்வொருவரும் தங்கள் தங்களாலியன்ற பணவுதவி செய்ய வேண்டுமென, இச்சபையின்பேரால் நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறோம். மேலும் மனமுவந்து பணமுதவும் அபிமானிகளின பெயருந் தொகையும் விபரமும் காலந்தோறும் இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்களில் வெளிவருமெனவுந் தெரிவிக்கின்றேம். பணம் அனுப்பும் அன்பர்கள்

கௌரவ காரியதரிசி, சைவபரிபாலனசபை C/O இந்துசாதனம் வண்ணார்பண்ணை என்ற விலாசத்திற்கு அனுப்பலாகும்.

இங்ஙனம்

இ. சிவகுருநாதர்

ஐ. வ. குலசிங்கம்

கா. சண்முகம்

அ. அருளம்பலம்

மு. மயில்வாகனம்

ஷைசபை வைரவிழாச் சபையார்க்காக

## இன்னும் ஒன்றரை லட்சம்ரூபா வேண்டுமாம்

வித்தியாசாலைகளிலே இலவசப் போசனம் அளிப்பதற்காக, இவ்வாண்டுக்கு 5,750,000 ரூபா செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை போதாது என்றும் இன்னும் ஒன்றரை லட்சம் ரூபா அதிகமாக வேண்டும் என்றும் கல்விமந்திரி ஓர் உபமான்யப்பிரேரணையை அரசாங்க சபையில் எடுத்தாளவிருக்கிறார்.

## யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

### லட்சம்ரூபா நிதிசேர்க்கும் நிருவாகசபை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைக்கென ஓர் நிலயத்தை அதன் வைர விழாவின்போது அமைத்துத் திறப்புவிழாச் செய்விப்பதற்கென ஓர் உப நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. சபையின் அதிகாரசபையில் உள்ள 24 அங்கத்தவர்களுடன் பின்வரும் 26 அங்கத்தவர்களையும் சென்ற ஞாயிற்றுக்கிழமை (22-9-46)நிகழ்ந்தசபை தெரிவுசெய்தது.

1 டக்ரர் S. சுப்பிரமணியம் J.P.
2 ஸ்ரீ C. குமாரசுவாமி
3 ,, S. சிவபாதசுந்தரம்
4 ,, P. K. சோமசுந்தரம்
5 , G. G. பொன்னம்பலம்
6 டக்ரர் V.K பரமநாயகம்
7 ஸ்ரீ A. S. சங்கரப்பிள்ளை
8 ,, M. தில்லையம்பலம்
9 ,, S. நடேசன்
10 ,, T. சிவப்பிரகாசபிள்ளை
11 ,, K. S. சுந்தரம்பிள்ளை
12 ,, J. தியாகராஜா
13 ,, A செல்லமுத்து
14 ,, S. சோமசுந்தரம
15 ,, S. சிவசுப்பிரமணியம்
16 இராசவாசல் முதலியார் N. கனகநாயகம்
17 ஸ்ரீ V. இராமசுவாமி
18 , N. நடராசா
19 ,, K. நடராசா
20 ,, T. சங்கரப்பிள்ளை (பிறக்ரர், மூளாய்)
21 ,, S V. சண்முகம்பிள்ளை
22 முகாந்திரம் S. குமாரசுவாமி (மட்டக்களப்பு)
33 ஸ்ரீ K. கனகரத்தினம்
24 ,, C. S. K. நமசிவாயம் செட்டியார்
25 டக்டர் E. V. இரத்தினம்
26 டக்ரர் G. விக்கராஜா

உபநிருவாகசபைக்கு ஸ்ரீமான்கள் K. சண்முகம் (பரிஸ்ரர்) A. அருளம்பலம் (பிறக்ரர்) என்பவர்கள் காரியதரிசிகளாவர்.

கடிதம்

## இது நீதியா?

ஐயா,

புடைவை கடைகளில் வாங்கும்போது புடைவைக் கூப்பனுடன் அரிசிக்கூப்பனையும் கொடுக்கும்படி ஐவுளிக் கடைக்காரர்கள் கேட்டுக்கொண்ட மறுவிற் கிணங்க ஐவுளிக்"கன்ரோலரும்" ஒத்துக்கொண்டதாக பத்திரிகையில் விளம்பரம்செய்திருக்கிறதாகக் கேள்விப்படுகிறேன். நான் திருகோணமலையிலிருக்கிறேன்; எனது மனைவியும் பிள்ளையும் யாழ்ப்பாணத்திலிருக்கிறார்கள்: சென்ற முறை புடைவை எடுக்கும்போது, எனது 'கூப்பனையும்' சேர்த்து எனது மனைவிக்கு 1 சேலையும், எனது மகனுக்கு 3 யார் வெள்ளைத் துணியும் வாங்கினார்கள். இம்முறை எனக்கு ஒரு வேட்டியும் சால்வையும் வாங்குவதற்குப் புடைவைக் கூப்பனை இவ்விடம்அனுப்பும்படி எழுதினேன். அத்துடன் அவர்களின் அரிசிக் கூப்பனையும் அனுப்பும்படி கேட்டால் அந்தக்கிழமையும் சிலவேளைகளில் அடுத்த கிழமையும் அவர்கள் பட்டினி கிடக்கவேண்டி நேரிடும். இவ்விடம் ஐவுளிக் கடைகளில் வேட்டிசால்வை கிடைப்பது குதிரைக் கொம்பாயிருக்கிறது. கொழும்பிலிருந்து வந்தால் கொடுக்கிறோம் என்கிறார்கள் எத்தனை நாட்கள் செல்லுமோ தெரியாது. அப்படியிருக்கிற இலட்சணத்தில், அரிசிக்கூப்பனை இவ்விடம் தாமதித்தால் எனது பெண்சாதி பிள்ளையின் கதி என்னவாக முடியும். அல்லது அரிசி [illegible] வாங்கி [illegible]லனுப்புவதா. கூப்பனுக்கு வாங்கும் பஞ்சப்படி கஞ்சி காய்ச்சிக்குடிக்கப் போதாமலிருக்கும் நாட்களில், பட்டினி கிடக்கும்படி வற்புறுத்துகிறார்கள் போலும். இல்லையேல் 'கள்ள மார்க்கட்டை' ஆதரி என்று சொல்வதற்குப் பதிலாக 'அடிக்காமல் அடிக்கிறேன் நீ அழாமல் அழு' என்ற மாதிரி போலும்.

இப்படிக்கு,

க. வ. கார்த்திகேசு,

திருகோணமலை.

# புகைரதத் திருடர்

## துப்பாக்கி கொண்டு திருடும் முயற்சி

இப்போது சிலகாலமாகப் புகைரதப் பகுதியில், பிரயாணிகளுடைய பொருள்களும், சாமான்வண்டிகளுக்குள் இருக்கும் பொருள்களும் திருட்டுப்போவது சாதாரணமாகி வருகிறது. திருடர் இப்போது ஆயுதபாணிகளாகப் புகைரதங்களைத் தாக்கிப் பொருள்களை அபகரிக்கவும் முன்வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இற்றைக்குச் சில நாட்களுக்குமுன் நாவலப்பிட்டியாவிலிருந்து வத்தகாமத்துக்குப் பெருந்தொகைப் புடைவைகள் ஓர் சாமான் வண்டியில் அனுப்பப்பட்டன.

புடைவைகள் இருந்த பெட்டிக்கருகே இன்னொர் பெட்டியில் அவற்றுக்குக் காவலாகப் பொலிசாரும் சென்றனர்.

நள்ளிரவில் பத்துவத்தைக்குச் சமீபமாகப் புகைரதம் சென்றதும் ஆரோ சிலர் புகைரத என்ஜின் சாரதியை நோக்கித் துப்பாக்கியாற் சுட்டனர். அதிர்ஷ்டவசமாகச் சாரதி தப்பினர். சாரதி வெகு வேகமாகப் புகைரதத்தைச் செலுத்தினர்.

இப்படியாகத் துணிகள் இந்தப் புகைரதத்தில் அனுப்பப்படுகின்றன என்பதை ஏற்கெனவே அறிந்துள்ள சில திருடர் இந்த அக்கிரமத்தைச் செய்துள்ளனர் என்று யூகிக்கப்படுகிறது. இதுபற்றிய விசாரணை நடக்கிறது.

# தொழில் மந்திரி

## மிஸ்ரர் ஷிவவித்தாரணே

சென்ற செவ்வாய்க்கிழமை பிற்பகல் நிகழ்ந்த கைத்தொழில் நிருவாகசபைக் கூட்டத்தில் மாத்தறைப் பிரதிநிதியான மிஸ்ரர் ராஜா ஷிவவித்தாரணேயே தொழில் மந்திரியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அவருடன் இத்தப் பதவிக்கு ஸ்ரீ ராஜகுலேந்திரன் அபேட்சகராக நின்று போட்டியிட்டார்.

மிஸ்ரர்ஷிவவித்தாரணேக்குச்சாதகமாக இந்தியப் பிரதிநிதிகளான ஸ்ரீ ஐ. எக்ஸ். பெரீரா, ஸ்ரீ கோ நடேச ஐயர் என்பவர்கள் உட்பட 5 வாக்குகள் கிடைத்தன.

ஸ்ரீ ராஜகுலேந்திரனுக்கு ஐரோப்பிய அங்கத்தவரான மிஸ்ரர் R. E. ஸ்பென்சரின் வாக்குச் சம்மதம்மாத்திரமே கிடைத்தது.

## பொன் வெள்ளி இறக்குமதி

இப்போது இலங்கையிலே ஊரவரின் உபயோகத்துக்கு வேண்டிய பொன் வெள்ளி முதலாம் உலோகங்களை வர்த்தகரே இறக்குமதி செய்து விற்கின்றனர். இந்த முறை பிழையானது எனவே. அரசாங்கமே இப்படியான விலையுயர்ந்த உலோகங்களை இறக்குமதி செய்து விநியோகிக்கவேண்டு மென்னும் பிரேரணையைத் தாம் எடுத்தாளப்போவதாக அரசாங்கசபைப் பிரதிநிதி மிஸ்ரர் தோமஸ் அமரசூரியா அறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

# பிளவு ஏற்படுமா?

## சிங்களரிடையே ஏற்படும் என்கிறார் ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம்

"சர்வகலாசாலையில் படிக்கும்பொழுது இலங்கை ஒரே நாடு - ஒன்பது மாகாணங்களும் ஒரே மாதிரி ஆளப்படுகின்றன என எண்ணினேன். ஆனல் சட்டசபையில் புகுந்தபின் தான் தமிழ்மக்களின் தாழ்மையைக் கண்டேன்" என்று கரவெட்டி விக்நேஸ்வரக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் சென்ற சனிக்கிழமை நடந்த கூட்டத்தில் திரு ஜி. ஜி.பொன்னம்பலம் கூறினர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவருக்குக் குதூகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது அநேக பிரமுகர்கள் சொற்பொழிவாற்றியபின் தலைவர் திரு. பொன்னம்பலம் பேசியதின் சாரம் பின்வருமாறு:

'நான் உங்களைக் கேட்பதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். நாம் சொற்ப தொகையினராய் இருந்தாலும் நம்மிடையே கட்டுப்பாடு அவசியம்வேண்டும் நீங்களனுப்பும் பிரதிநிதிகள் ஒரே கட்டுப்பாட்டிற் கடங்கியவர்களாயும், ஒரேகொள்கையைப் பின்பற்றுபவர்களாயு மிருக்கவேண்டும். சிங்களவர்களிடையே எதிர்காலத்தில் பிளவேற்படப்போகின்றது ஒவ்வோர் கட்சியும் பக்கபலம்தேடி உங்கள் பிரதிநிதிகளின் உதவியை நாடுவார்கள். அப்பொழுது எங்கள் உரிமைகளை கௌரவத்துடன் பெற்றுக்கொள்வதற்கு நம்மிடையே கட்டுப்பாடு அவசியம்"

"நான் என்றும் சிங்களப் பொதுஜனங்களின் நண்பன் என் வரும்படியில் 90 வீதம் அவர்கள்பணமே இவ்விதமான என்னை "வகுப்புவாதி" என்றும் சிங்களவருடன் போர செய்வதற்கு ஆள் சேர்ப்பவன் என்றும் சொல்லுவது விநோதமே."

மேலும் அவர் பேசியதாவது:-இலங்கையை விட்டுப் பிரிட்டிஷார் வெளியேறவிருக்கும் சமயத்தில் தங்களுடைய உரிமையை வாதாடி வாங்கத் தமிழ்மக்களிடையே ஓர் ஸ்தாபனம் வேண்டுமென்றும், அதன்மூலம் தமிழுக்கும் தமிழ் சாகித்தியத்திற்கும் பாதுகாப்பேற்படும் என்றும் அவ்விதமான ஸ்தாபனமே தமிழ்க் காங்கிரஸ் என்றும் குறிப்பிட்டார்.

## மீசாலை வாலிப சங்கப் பொதுக்கூட்டம்

ஷை கூட்டம் 20 9-46 வெள்ளிக்கிழமை மாலை 6½ மணிக்கு மீசாலை தென்கிழக்கு கமலாம்பிகை வித்தியாசாலை மண்டபத்தில் சங்கப் போஷகர் ஸ்ரீ ப. வீரசிங்கம் அவர்களின் தலைமையில் கூடியது.

பண்டிதர் ஸ்ரீ K. தம்பையா, கமக்காரர் சங்கத்தலைவர் ஸ்ரீ N. அருணாசலம் B. A. திரு J. T. ஹென்ஸ்மன், திரு. S. சிதம்பரப்பிள்ளை தலைமையாசிரியர், பண்டிதர் திரு P. M. ஞானபபிரகாசம் ஆகியவர்கள் சங்கத்தின் நன் நிலைமைக்குரிய உபாயங்களை எடுத்துக்கூறி சிறந்த விரிவுரைகள் நடாத்தினர்.

16 8-46ல் ஷை சங்கம் தொடங்கிய ஸ்ரீ கணேசவாசிகசாலை டக்ரர். S. சுப்பிரமணியம் J P அவர்களால் திறந்து வைக்கப்பட்டதும் பலரால் பாராட்டப்பட்டது.

ஈற்றில் தலைவர் R T. சுப்பிரமணியத்தின் நன்றிமொழிகளுடன் 11 மணியளவில் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரியமும் - தமிழும்

[ தமிழ் வாசிக்கும் மாணவர் விரும்பியபடி
குவாலாலம்பூர் திரு. அ. சிவகுருநாதன் எழுதியது].

(பற்சிறு—ர்,

தமிழ் மொழி இனிய நடையுடையதாக, இப்போதுள்ள தமிழர் பலரில் அந்நடைக்குரிய பண்புங் குணங்களும் செயல்களு மெங்கே? பல வகைப்படுஞ் சாதிக்குரிய மக்கள் பாஷாபிமானம்பற்றித்தம்மொழிகளுக்கு முதலிடங் கொடுத்து அவரவர் மொழியைப் படித்தும் பேசியும் பழகி முன்வருதல் நாகரிகமான முறையெனக் கொண்டு தம் மதிப்புடன் நடக்க விரும்புவர். அந்நிய மொழியிற் சிலகற்ற நம்மவரிற் பலர் சீலம் எப்படியோ வெனில், தம் மொழியை மறந்து அந்நிய மொழிக்கு முதலிடங் கொடுப்பதும், தமிழருந் தமிழரும் தங்கள் அந்தரங்க காரியங்கள் பற்றித்தமிழிற் பேசியும் எழுதியுங் கொள்ளல் இயல்பான முறையாகவும் அந்நிய மொழியில் பேசுவதும் எழுதுவதும் நாகரீகம் என்றும், அவ்வளவில் நில்லாது தமிழர் கூடுங் கூட்டங்களிலும் வழிபாட்டுக்குரிய இடங்களிலும் சமய விஷயங்கள் பற்றியும் அவசியமின்றி அந்நிய மொழியிற் பேசிவிடுதல் மோட்சமென்றும் மயங்கி நிற்பது கேவலமே. இது எதுபோலு மெனில் நல்ல கனியிருக்கக் காய் பிடுங்குதலும், தன் தாயை மறந்து விடுத்து அந்நியமான பெண் ஒருத்தியைத் தன் தாயெனக் கொள்ளுதலும் போலும். இதைவிடப் பரிகாசம் வேறுமுண்டோ? திருக்குறளில் இனியவை கூறல் என்னும் அதிகாரத்தில்,

'இனிய வுளவாக வின்னாத
கூறல்
கனி யிருப்பக் காய்
கவர்ந்தற்று''

என்றார் நாயனார்.

இனிமைப் பொருள் தருந் தமிழ் கனிவாயிருக்க, அதனை விடுத்துப் பிறமொழியில் பேசுதல் இன்னாத கூறல்போலாம்.

இங்கிலையில் தமிழர் தாமே தம்மையும் தம்மொழியையும் அவமதிப்பது போல எந்தச் சாதியாருஞ் செய்ய ஒருப்படார். ஒருவன் பிறமொழியைக் கற்பதன் நோக்கம் தனக்கு அந்நியமான பிறரோடு கலந்து நடக்கும் பொருட் டென்பதையும், அதன் மயமாகும் பொருட்டன்று என்பதையும் தமிழரிற் பலர் மறந்திடுகின்றனர்போலும். தங்கள் இல்லங்களிலும் இரண்டு தமிழும் நாலு இங்கிலீசும் இன்னும் வேறு அன்னிய மொழிகளும் கலந்து பேசிக் கொண்டால் அது இலட்சணமோ அல்லது அவலட்சணமோ என்று எள்ளளவுமோரார் போலும். மேலும், தமிழ் பேசும்போது தமிழிலும், பிறமொழி பேசும்போது அம்மொழியிலும் கலப்பில்லாமல் பேசிக்கொள்வது நாகரீகம் என்றும் இலட்சணம் என்றும் நோக்காமை தக்கதன்று. தமிழ் பேசும் ஒருவரோடு மற்றொருவர் தமிழும் வேறு மொழியுங் கலந்து பேசுதல் நகையினை விளைக்குமன்றி நாகரீகமாகாது. தமிழில் நினைந்து பேசுதலை விடுத்து அந்நிய மொழியில் நினைந்து பேசப் பழகுதல் குறைகளுள் ஒன்று.

தமிழ் வாசிப்பதில் ''அக்கறை''யில்லாத இங்குள்ள இளைஞர் வருங்கால நிலை எப்படி முடியும் என்பது சந்தேகமாகும். தம் சாதிக்குரிய நடையை அறியாது கைவிட நேருங்கால் நிலைதடுமாறுதல் கூடும். அதனால் தமக்கென ஒன்றில்லாப் பேதையராய் ஒரு சாதியிலும் வைத்தெண்ணப்படாது இகழப்படுதல் திண்ணம். இப்போலி நடையினால் தமிழர் தம் மொழியை அலட்சியஞ் செய்தலால், தமிழில் பேசவியலாமல் அந்நிய மொழிக்கு அடிமைப்படுதலும் சமயோசித நடையைப் பேண விரும்புதலும், அதனால் சாதியாசாரம் தவறிப்போதலும் பொதுவாகக் கண்கண்ட விஷயமே. தமிழ் மக்களுக்குரிய வாழ்க்கைக்குப் போலி நடையானது பல வழியிலும் பாதகமாகின்றது. தம் மொழியில் ஓரளவுக்கேனும் பழகி வருதலை விடுத்து அந்நிய மொழிக் கடிமையாவோர் எல்லாப்படியாலும் அடிமைகளேயென்பது மிகையாகும்.

''நல்ல மாதவமேது — தங்குலம் புரி நடையே'' என்றார் தருமரும் இதனால் அவரவர் சாதிக்கும் குலத்துக்கு முரிய நடையினால் நன்மைகளும் அதனைக் கைவிடுதலால் தீமைகளும் உண்டாம் என்பது.

இனி, ''நாமார்க்குங் குடியல்லோம்'' என்றெடுத்தார் தண்டமிழ் பாடிய தமிழ் வேந்தரான நாவரசர், தமிழர் என்னும் வெறும் பேச்சில் நின்று ஒரு கட்டுப்பாடு மின்றி அந்நியமொழிக் கடிமைப்படும் நம்போலியர் ''நாமார்க்குங் குடியல்லோம்'' என உரத்துப் பாடிவிடுதல் மட்டும் போதியதன்று. அம்மட்டில் ''நாமார்க்குங் குடியல்லோம் — நமனையஞ் சோம், நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம் — ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோ மின்பமே யெந்நாளுந் துன்பமில்லை'' என்னும் இவ்வரிய பேறுகள் இலகுவாய்ப் பெறக்கூடிய மலிந்த பொருள்களுமன்று. தங்குலம் புரி நடையாகிய நல்ல மாதவமும் வேண்டும். அன்றியும் தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சோமனுக் காளாதல் அரிதினுமரிதே. ஆதலின் கூடாத பல எளிய பழக்கங்களுக் கடிமையாகும் நம்போலியர் அக்கோமான் சேவடிகளைச் சேவித்தல் எவ்வாறு? 'கல்லா நெஞ்சினில்லானீசன்'' என்றாற் போல அவ்வீசன் சேவடிகளுக்குச் சேவை செய்யும் முறைமையினை அறிதற்குரிய நல்ல முறையில் கற்றல் வேண்டும். இந்நாளில் வியாபார முறையில் கற்றல் போலிக் கல்வியென்பதும், அதனால் மேலான அறிவு பெறப்படாதென்பதும் உயர்ந்த கல்விமான்கள் கருத்தாகும். ''அன்பும் அருளும் அறிவுக்கடையாளம்'' என்பவாகலின், போலி வகையிற் பெறுங் கல்வியினால் அன்பும் அருளுங் கூடுமாறில்லை. இந்நிலைக்கு நாங்களே போதிய சாட்சியாகின்றோம். ''கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு'' ''நூல் பல கல்'' என்றார் ஒளவையார். எழுதப்படுவனவெல்லாம் நூல்களுமாகா. அறிவு நூல்கள் வேறு; போலி வகையான நூல்கள் வேறு. இந்நாளில் பிழைப்புக்காக இங்கிலீசும் பிறவுங் கற்பவரில், தாய் தந்தையரிலும், தமிழ் கற்பவரிலும், ''நாம் பல கற்றனம்' என்னும் போலியான எண்ணம் தாமே தம்மை ஏமாற்றும் நினைவேயன்றி வேறில்லை. எழுத வாசிக்கப் படியாத பலர் அறிவு நிலையிலும் அன்பு நிலையிலும் ''நாம் பல படித்தனம்'' என்றளவில் தம்மை மறந்து மகிழும் நம்போலியர் கூறுமாறு எவ்வாறென்பதும் ஆசங்கைக் கிடமாகும். கற்றுமறிவில்லாதாரிலும், ''கல்லாதபேர்களே நல்லவர்களல்லவர்கள்'' என்றார் தாயுமானவரும். அதுபற்றியே ''கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக'' எனக் கட்டளை செய்தார் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார். கூடாத பல நூல்களை வாசித்து வீண்பொழுது போக்குதலிலும், நல்ல சில நூல்களைக் கற்றல் விசேடமாகும்.

—வரும்

## விளம்பரம்

கோதுமை மாக் கப்பல் வருகை தாமதித்தமையால் 1946-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 23-ந் திகதி திங்கட்கிழமை கொடுக்கப்படவேண்டிய கோதுமை மா பிரமாணத்துக்குப் பதிலாக, அரிசி அல்லது நெல்லு ஒவ்வொருவருக்கும் பிரதி உணவுக் கூப்பன்களில் கொடுக்கப்படும். பிரதி உணவுக் கூப்பன்களில் 23-ம் திகதியில் கொடுக்கவேண்டிய அரிசி அல்லது நெல்லு புரட்டாதிமாதம் 30ந் திகதி திங்கட்கிழமைக் குரிய அரிசியுடன் சேர்த்துக் கொடுக்கப்படும்

வேறு அறிவித்தல் கொடுக்கும்வரை புரட்டாதிமாதம் 23-ம் திகதி தொடக்கம் அரிசி அல்லது நெல்லு பின்வருமாறு விநியோகிக்கப்படும்.

| | A அரிசிக்கூப்பனில் | | | B பிரதி உணவுக் கூப்பனில் | | |
|---|---|---|---|---|---|---|
| வகுப்பு | அரிசி (சுண்டு) | அல்லது | நெல்லு (சுண்டு) | அரிசி (சுண்டு) | அல்லது | நெல்லு (சுண்டு) |
| குழந்தை | 2 | ,, | 4 | 1 | ,, | 2 |
| பிள்ளை | 3 | ,, | 6 | 1½ | ,, | 3 |
| சாதாரணம் | 4 | ,, | 8 | 2 | ,, | 4 |
| வேலையாள் | 5 | ,, | 10 | 2½ | ,, | 5 |

ஒரு சுண்டு, பறைவெட்டி கால்படியாக மதிக்கவேண்டும்

எம். ஸ்ரீகந்தா,
யாழ்ப்பாணம் உதவி உணவுக்கட்டுப்பாட்டுத் தலைவருக்காக.

21-9-46 G 80 27

## திருநின்ற செம்மை

1-ம் பக்கத் தொடர்ச்சி

வுறுத்திய ஒழுக்க நெறியாகிய செம்மை நெறியொழுகி அம்மெய்ப்பொருளோடொன்றிய செம்புலச் செல்வராகிய உயர்ந்தோர்பாலல்லது திருநிலைபெறுதலியலாது. அவர்கண் நிலைபெறும் அழியாத் திருவினை அருட்செல்வம் எனபர் பொய்யில் புலவர். நிலையிதலின்றி இழிந்தார்கண்ணும் பொருந்தும் ஏனைப் பொருட் செல்வம்போலாது என்றும் நிலையுதலுடையதாய் மெய்யுணர்ந்தரர் கண்ணேயே நிலைத்து விளங்கும் இயல்புடையது இத் திருவருளாதலின் இதனையே ''செல்வத்துட் செல்வம்'' என வேண்டினார் திருவள்ளுவர். சமய நிலையில் மட்டுமல்லாமல் ஏனை உலகியல் வாழ்விலும் இவ்வருளென்னும்நிலைபெற்ற செல்வமே வேண்டப்படுவதொன்றாகும். நிலைபெற்ற செல்வமாகச் சான்றோர் மேற்கொண்ட செல்வமாவது தன்னைச் சேர்ந்த உயிர்களின் துன்ப நிலைக்கு அஞ்சி இரங்கியுதவும் அருளுணர்வே யென்பதனை, ''நெடிய மொழிதலும் கடிய வூர்தலும்—செல்வமன்று. தம் செய்வினைப் பயனே—சான்றோர் செல்வமென்பது சேர்ந்தோர் புன்கணஞ்சும் பண்பின்—மென்கட் செல்வஞ் செல்வமென்பதுவே'' என வரும் நற்றிணைப் பாடலால் இனிது விளங்கும், இவ்வியாத் திருவினைப் பெறுதற் குரிமையுடையார் பொறிவாயிலைந்தவித்தான் அறிவுறுத்திய பொய்தீர் ஒழுக்கநெறியிற் றவறாது ஒழுகும் சான்றோரேயாவர் இத்தகைய செம்மைநெறியிற்பெறும் திருவருள் நலமே செம்மை நலம் எனப்படும். இத்தகைய திருவருள் நலம் செறியப்பெறாதார் சிதடர் என இழித்தொதுக்கப்படுவர். ''செம்மை நலமறியாத சிதடரொடுந் திரிவேனை'' என வருஉந் திருவாசகத் தொடர் கொண்டு இவ்வுண்மை தெளியப்படும். —வரும் (சித்தாந்தம்)

## போஸ் எங்கே?

### சீனத்தில் இருக்கிறாரா?

சிங்கப்பூரில் ஸ்தாபிக்கப்பட்ட முதற் சுதந்திர இராணுவத்தில் சேனாதிபதியாக இருந்தவரும், இப்போது சீக்கியப் பிரதிநிதித்துவ சபையின் தலைவராயுள்ளவருமான நிரஞ்சன்சிங் கில்என்பவரை சுபாஷ் சந்திரபோஸ் உயிருடன் இருக்கிறார் என்னும் செய்தி உண்மையானதா என்று ஓர் பத்திரிகை நிருபர் கேட்டார். அதற்கு அவர் பின்வருமாறு பதிலிறுத்தார்.

''சமீபகாலத்தில் நான் ஸ்ரீஜுத் போஸைக் காணவில்லை. அவருடைய நடைவடிக்கைகளைப்பற்றி யாராவது நிச்சயமாகக் கூறமுடியாது. ஆனால் இப்போது சிலகாலமாகக் கிடைக்கும் தகவல்களை நோக்குமளவில் அவர் உயிருடன் இருக்கலாம் என்றே நம்பவேண்டியிருக்கிறது.

''அவர் உயிருடன் திரும்பி இந்தப் பாரதநாட்டுக்கு வரவேண்டுமென்பதே எனது பிரார்த்தனை.

''அவர் இப்போது மறைந்திருப்பாரேயானால், அது சீனத்திலன்றி வேறெங்குமில்லை என்றே நினைக்கிறேன். அவர் ருஷியாவில் இருக்கிறார் என்ற செய்தியை என்னால் நம்பமுடியாது. ருஷியா ஜப்பானுக்கு விரோதமாக மிகவும் பகைமை பாராட்டியிருந்தமையால், ஸ்ரீஜுத் போஸ் அங்கே போயிருக்கமாட்டார். அவர் சீனத்துக்குப் போயிருக்கலாம். அவர் அங்கேபோயிருந்தால் சீன அரசாங்கம் அவர்க்குத் தஞ்சம் கொடுத்திருக்கும் இந்தியத் தலைவர் ஒருவரைக் காட்டிக் கொடுக்கச் சீனத்து அரசினர் ஒருபோதும் சம்மதிக்கமாட்டார்.

## நவராத்திரி

1ம் பக்கத் தொடர்ச்சி

னம் சத்தியை வேண்டி இதற்கு அடுத்துள்ள மூன்று இராத்திரிகளையும் இலட்சுமிக்குரிய விழா நாட்களாகவும், இறுதியிலுள்ள கல்வியை அளிக்கும்படி 'சரஸ்வதி' என்னும் சத்தியை வேண்டி இறுதியிலுள்ள மூன்று இராத்திரிகளையும் சரஸ்வதிக்குரிய விழா நாட்களாகவும் ஆகவே, ஒன்பது இராத்திரிகளையும் மூன்று சத்திகளுக்குமுரிய விழா நாட்களாகக் கொண்டாடுகின்றனர்.

இனி, ஒன்பது நாட்களும் இங்ஙனம் சத்திகளை வழிபட்டதால் வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றையும் அடைந்துவிட்டதற்குரிய வெற்றி நாளாக பத்தாம் நாளை 'விஜயதசமி' என்ற பேராற் கொண்டாட்டம் நடத்துகின்றனர். இத்தினத்தில் 'மகிஷாசுர மர்த்தனம்' என்ற திருவிழாவும் கோவில்களில் நடத்தப்படுகின்றது. அதற்குப் பிரமாணமாகப் புராணக் கதையுமொன்றுண்டு. அதில் எருமைத் தலையுடையவனும் நல்லோரை வருத்திவந்தவனும், மிக வலிமையுடையவனுமாகிய ஓரசுரனை, துர்க்காதேவி அடக்கி வலிதொலைத்து யாவரையும் துன்பத்திலிருந்து விடுவித்தது கூறப்படுகின்றது. அதிற் பொதிந்த உட்பொருள்தான் யாது? ஆன்மாக்களைப் பீடித்துள்ள உட்பகையாகிய ஆணவத்தை, கடவுட் சத்தி வலிகெடுத்து ஆன்மாக்களை உய்யச்செய்தது என்பதே பொருள்.

இனி, இக்கொண்டாட்ட முக்கியத்தை உற்று நோக்குமிடத்து, வீரம், செல்வம், கல்வியாகிய மூன்றும் மனித குலத்தாரெல்லாருக்கும் இன்றியமையாதனவே. ஆகவே இக்கொண்டாட்டம் சாதி சமயம் பாராது யாவரும் எவ்வெப் பெயரிட்டேனும் கொண்டாடப்பாலதே. சைவர்களாகிய நாமும் அற்ப கல்வியின் வயப்பட்டு, அநாகரிக வழக்கமென்றவமதியாது இத்தினங்களை விசேட பத்திசிரத்தையோடு விதிப்படி கொண்டாடுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஊடாடுவாளாயினள்; இங்ஙனமாகச் சிலநாள் கழிந்தன.

### சூரியநாராயண சாஸ்திரியார்

அந்தக் கலாசாலையின் தலைமையாசிரியராக அமர்ந்த சூரியநாராயண சாஸ்திரியார் இருபத்தைந்திற்கும் முப்பதிற்கும் இடைப்பட்ட வயசினர்; அவர் பிரமகுலத்தினரென்பது முந்தியே சொல்லப்பட்டது: சர்வகலாசாலைப் பரீட்சையில் எம். ஏ. வகுப்பில், கணிதப்பகுதியில் விசேஷ திறமையோடு சித்தி யடைந்தவர், புருஷ லட்சணம் வாய்ந்தவர்; அவரிடத்துள்ள கல்வியழகை அவர் முகமே காட்டுமெனலாம்; சாந்தமான குணம், இதமான வார்த்தை, இனிய பேச்சு, விநயமான ஊடாட்டம், தெய்வ நம்பிக்கை, ஆலய வழிபாடு, நேர்மை முதலாங் குணங்களுஞ் செயல்களும் சூரிய நாராயண சாஸ்திரியாரிடத்தில் இயல்பாகவேயமைந்துள்ளனவெனச் சொல்லுதல் மிகையாகாது; தமிழ் சம்ஸ்கிருதம் ஆங்கிலமென்னும் மூன்றுமொழிகளைப் பயின்றுள்ளாரெனினும், இக்காலத்துப் படித்தவரென் றிருப்பவர்களுடையமூளையுட் புகுந்து குடியிருக்கும் நவநாகரீகமும், விபரீத கொள்கையும் சூரிய நாராயண சாஸ்திரியாரிடத்தில் எள்ளளவேனும் புகுந்திலவெனலாம்; அவர் தம்குலம கோத்திரத்திற்குரிய வைதிகக் கொள்கையும் ஒழுக்கமுமுடையவர்; சங்கீதமும் முறையாகக் கற்றவர்; பிரமகுலத்திற் பிறந்தும், வயசு இருபத்தைந்திற்கு மேற்பட்டும், ஒரு கலாசாலையின் தலைமையாசிரியராக உத்தியோகம் வகித்திருந்தும், தன் பெற்றோருக்கு ஒரேயொரு மகனாகப்பிறந்தும், எவ்வகையான குறைவற்றவரா யிருந்தும், சாஸ்திரியார் இல்லறத்திற் புகுதலின்றி நைஷ்டிகப் பிரமசாரியாக வ ஒழுகிவருவாராயினர்.

### உலைப்படு மெழுகதென்ன உருக்கின

இங்கிதத்தின் கலைத்திறனை அன்று அந்தப் பரீட்சகர்கள் பரீட்சித்த போது, இத் தலைமை யாசிரியரும் உட னிருந்தாரல்லவா; இங்கிதத்தின் பேரழகும் விநயமும் இனிய இசையும், அச்சமயத்தில் அவள் செய்த பரதநாட்டியமும், அதனிடத்தமைந்த அபிநயமும், அப்போது அவளின்காதளவோடிமீளுங் கண்களின் நோக்கும், அவளது செவ்விய அதரங்களுங் கிடையே தோன்றி மறையும் புன்முறுவலும், இன்னபிற நலன்களும் ஒருங்குசேர்ந்து, பிரமச்சாரியாகிய சூரிய நாராயண சாஸ்திரியினுடைய உள்ளத்தைப் பரீட்சிக்கத் தலைப்பட்டன; சாஸ்திரியின் உள்ளம் அப்பரீட்சைகளை எதிர்த்து நிர்வகித்து நிற்றலாற்றாது உடைந்து பின்னிடந்துபோயதெனலாம்; சாஸ்திரியார் கல்வியறிவிற் சிறந்தவராதலாலும், மனத்திண்மை யுடையவராதலாலும், இங்கிதம் காரணமாகத் தம் உள்ளம் பங்கப்பட்டதைப் புறத்தே காட்டாது, காதல் கொள்ளாதவர்போல் ஊடாடுவாராயினர்; என்றாலும் தினமும் இங்கிதத்தை அவர் காணவும், அவள் செயல்களை அவர் அவதானிக்கவும் நேர்ந்தமையினால், சாஸ்திரியாருடைய மனக் கட்டுப்பாடும் அவரை அறியாமலே மெல்லமெல்லநெகிழ்ச்சியுறலாயிற்று. இங்கிதம் தனக்குரிய வகுப்பிலிருக்கும் பிள்ளைகளுக்குச் சலைபயிற்றிக்கொண்டிருக்கும்போது, இடையிடையே தலைமையாசிரியர் அங்கே செல்வதுண்டு; அந்த நேரங்களிலெல்லாம் இங்கிதம் இருக்கைவிட்டெழுந்து விநயமாக ஒதுங்கி நின்று இதமாகப் பேசுவாள்; இச் செயல்களெல்லாம், சாஸ்திரியாருடைய உள்ளத்தை உலைப்படு மெழுகதென்ன உருக்கின. ஆனாலும் இங்கிதத்தின் பூரண வரலாற்றையும் உள்ளபடி யறியவேண்டுமென்ற சிந்தனை தலைமையாசிரியருடைய உள்ளத்திற் கிடந்தது.

### எப்படி மறக்கமுடியும்?

சாஸ்திரியார் இங்கிதத்தைக்காண வேண்டும் அவளுடன் பேசவேண்டுமென்று எவ்வளவு விருப்பங்கொண்டாரோ, இங்கிதமும் தலைமையாசிரியர் தன் வகுப்பிற்கு வருதல்வேண்டும், தன்னுடன் வார்த்தையாடல் வேண்டுமென்று அவ்வளவு விருப்பமுற்றாள்; எறும்பூரக் கல்லுந் தேயுமல்லவா? இங்கிதத்தின் உள்ளத்தில் அவளையறியாமலே, தலைமையாசிரியர் மீதுபற்றுண்டாகி நாளடைவில் அது காதலாக மாறியது: தலைமையாசிரியர் தன்னிடத்தில் வைத்துள்ள பற்று எப்படிப்பட்டதென்று இங்கிதம் படுக்கையிற் கிடந்துகொண்டு சிந்திப்பாள்; நல்ல நிலையிலுள்ள அவர் தம்மை மணஞ்செய்ய எண்ணுவாரோ, உடன்படுவாரோ, ஒருவாறு உடன்பட்டாலும் யார் அதைக்கூட்டிவைப்பவர் என்றெல்லாம்எண்ணியெண்ணி மனங் கவல்வாள்; "முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டாற் கிட்டுமா?" என்று நினைத்து மனம் உடைவாள; "கிட்டாதாயின் வெட்டென மற என்றபடி நாம் இந்தச் சிந்தனையை உள்ளத்திலிருந்து அறவே ஒழித்துவிடல் வேண்டும்; இல்லையேல் என் மனதிலுள்ள சமாதானம் பங்கப்படும்; மனக்கவலையிருந்தால் என் கடமையை நான் பூரணமாக ஆற்றுதல் முடியாது" என்று சிந்தித்து அவள் அந்த எண்ணத்தை அறவே மறந்துவிட வேண்டுமென்று நிச்சயிப்பாள்; எப்படி மறக்கமுடியும்? எவ்வாறு நிச்சயிக்கமுடியும்? அவள் நிச்சயித்த அடுத்த நிமிஷம் பழைய படி அந்த எண்ணம் அவளுடைய உள்ளத்தில் வந்தேசேரும்.

### "பாதுகாப்பாளரா யுள்ளவர் அந்தப் பரம்பொருள்தான்"

இங்ஙனமாக ஒருதினம் வித்தியாசாலை விட்டுப் பிள்ளைகளும் ஆசிரியர்களும் வீட்டிற்குப்போகப் புறப்படும் நேரத்தில், இங்கிதம் அடுத்தநாள் தான் பள்ளிக்கூடத்திற்கு வருதல் இசையாதென விடுதலை பெறும்பொருட்டு எழுதியகடிதத்தை, தமது உத்தியோகஸ்தானத்தில் தனிமையாயிருந்த தலைமையாசிரியரிடம் விநயமாகக் கொடுத்தாள்; அவர்அதனை ஏற்றுவாசிக்கும்போது, இங்கிதம் நிற்றலைப் பார்த்து, "ஏன் நிற்பான்; உந்த நாற்காலியில்இருக்கலாமே" என்றுசொல்லுதலும், தன்னை இருக்கச் சொன்ன தன்பொருட்டுஆசிரியர்க்குநன்றிகூறிவிட்டு இருத்தலின்றி நின்றாள்; "மற்றை ஆசிரியர்கள் எவரும் இங்கு வரும்போது இருக்கச் சொன்னால் இருப்பார்களே, நீர் இருக்கக் கூசுகின்றீரே" என்று இதமாகச் சொல்ல, "இல்லை, ஐயா, பெரியார் இருக்குமிடத்தில் ஒதுங்கி நிற்பதன்றி அவர்கட்கெதிரில் இருக்கும் வழக்கம் எங்கள் குடும்பத்திலில்லை' குறையெண்ணுதீர்கள்" என்று தலைமையாசிரியருடைய உள்ளம் கனியும் வண்ணம் கனிவுடன் பன்னினள் இங்கிதம். "உங்கள் குடும்பத்தினரின் பழக்க வழக்கங்கள் அப்படிப்பட்டனவா மிக நன்று" என்று தலைமையாசிரியர் சொல்லி, பின்னரும் அவளை அன்பு பெருக நோக்கி, "உம்முடைய விஷயமாக நான் ஏதும் பேசவேண்டியிருந்தால், யாருடன் பேசவேண்டும்" என்று கூசிக் கூசிக் கேட்டார்; "என்னுடைய விஷயமாக ஏதும் சொல்லவேண்டியிருந்தால், என்னிடந்தானே ஐயா சொல்லவேண்டும்" என்று புன்முறுவலரும்பப் புகன்றாள் இங்கிதம்; தலைமையாசிரியர் தாம் தவறான வழியிற் கேள்வி கேட்டுவிட்டோமென்பதை உடனே புணர்ந்து, அதற்கு உத்தரஞ் சொல்லாது, "உமக்குப் பாதுகாப்பா யுள்ளவர் யார்" என்று இதமாக வினவினர்; "எமக்குப் பாதுகாப்பாளரா யுள்ளவர் அந்தப் பரம்பொருளொருவர்தாம் ஐயா" என்று மேலே பார்த்தபடி, கைகூப்பி கண்களில் நீர் ததும்பக் கவலையுடன் சொன்னாள்; தலைமையாசிரியர் மனந்திடுக்குற்றார்; அவர் உடனே அதே கடிதத்தில் உமக்கு நாளைக்கு விடுதலையுதவப்பட்டது என்று எழுதிக்கொடுத்துப் "போய்வாரும்" எனவிடையுங் கொடுத்தார்; "ஐயா, என் விஷயமாக ஏதும் பேச நீங்கள் விரும்பினால், என் அண்ணா இராமச்சந்திரனிடம் பேசலாம்" எனலும், 'திரு இராமச்சந்திரன் உமது சொந்தத் தமையனா" என்று ஆசிரியர் அற்புதத்துடன் கேட்க, "இல்லை, ஐயா, அவர் எனது அபிமானத் தமையனாகவிருந்தாலும், நான் என் சொந்தத் தமையனாகவே அவரைப் பாவித்து நடக்கிறேன்; அவரும் என்னைத் தன் உடற்பிறப்பாகவே மதித்து ஊடாடி வருகிறார்; மற்றவர்கள் என் வரவை எதிர்பார்த்த வண்ணம் இரதத்திலிருக்கிறார்கள்; நான்போய் வருகிறேன்" எனலும், "ஆம் போய் வாரும்" என்று தலைமையாசிரியர் விடைகொடுத்தார்; இங்கிதம் போய் இரதத்தில் [illegible] தன் வீடு சேர்ந்தாள்.

(வரும்)

## அடுத்த ராஷ்டிரபதி யார்?

காங்கிரசின் பாராளுமன்றம் எனப்படும் சபை இப்போது சில நாட்களாகப் புது டெல்கியிற் கூடிப் பல விஷயங்களைத் தீர்மானித்தது. இடைக்கால அரசாங்கத்தின் தலைமைப் பதவியைத் தாங்கிக்கொண்டு காங்கிரஸ் தலைமைப் பதவியையும் தாங்குதல் தம்மால் முடியாது என்று பண்டிதர் ஜவஹர்லால் காங்கிரஸ் சபைக்கு அறிவித்து விட்டார். இன்னும் சிலகாலத்தில் நிகழவிருக்கும் காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் வரை பண்டிதர் நேருவே தலைவராகவிருக்கவேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது. அடுத்த காங்கிரஸ் தலைவராக யார் தெரிவு செய்யப்படுவர் என்ற பிரச்சினை இப்போது பெலமாக இருக்கிறது. டக்ரர் பட்டாபி சீதாராமையா, ஆச்சாரிய கிருபாளினி என்னும் இருவரில் ஒருவரே அநேகமாகத் தெரியப்படலாம் என்று யூகிக்கப்படுகிறது.

## பண்ணைப் பாலம்

பண்ணைப்பாலம், வருகிற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5மணியளவில், போக்குவரத்து மந்திரி மிஸ்ரர் கொத்தலாவலை அவர்களால் திறந்து வைக்கப்படும் என்று அறிகிறோம்.

## அரபுநாடுகளும் விரோதமா?

மத்திய கிழக்குப்பகுதியில் உள்ள முஸ்லீம்கள் ஜின்னாவின் கொள்கையை ஆதரிப்பதாகத் தெரியவில்லை. இந்தியாவைத் துண்டாடும் விஷயத்தில் அரபுநாடுகள் ஜின்னாவின் கொள்கையைக் கண்டிக்கின்றன என்றும் சொல்லலாம். அரபு நாடுகளின் உயர்தரச் சபையின் காரியதரிசியான அஸாம்பே என்பவர் பண்டிதர் நேருவின் கொள்கையை ஆதரித்து ஓர் செய்தி யனுப்பியிருக்கிறார்.

## ருஷியாவுக்குத் தூது

இப்போது பரிஸ் நகரில் நிற்கும் ருஷிய அந்நிய நாட்டு மந்திரி மொலட்டோவ்என்பவரைக்கண்டு, இந்திய முஸ்லீம்கள் படும் அவதியைக்கூற, சிந்து முஸ்லிம் லீக் தலைவர் அப்துல்லாஹாரூன் லண்டனிலிருந்து பரிசிற்குப் புறப்பட்டுவிட்டார், அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியக் காங்கிரஸ் எல்லாமாகச் சேர்ந்து முஸ்லிம்களுக்கு விரோதமாகச் சதி செய்கின்றனவாம். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில், ருஷியாவே தங்களுக்குத் துணைசெய்ய வேண்டுமென அப்துல்லாஹாரூன்மொலற்றோவைக் கேட்பாராம்.

## இந்திய எல்லையில் சுபாஷ் போஸ் இருப்பது நிச்சயமாம்

நேத்தாஜி, சுபாஷ் சந்திரபோஸ் வஸிரிஸ்தானில் (இந்தியாவின் எல்லையில்) இபபி பக்ரி என்ற தலைவரின் விடுதியில் சுகமாக இருந்து வருவதாக 'சிந்து பார்வர்ட் பிளாக்' பத்திரிகை தெரிவிக்கிறது.

வஸிரிஸ்தான்மீது பிரிட்டிஷ் விமானங்கள் குண்டுகளை வீசியபோதிலும் சுபாஷ்போஸ் ஒருவித அபாயத்திலும் மாட்டிக்கொள்ளாமல், பக்கிரியின் அரண்மனையில் இருப்பதாக மேற்படிபத்திரிகை அறிவிக்கிறது.

நேத்தாஜி போஸ் செப்டெம்பர் 9ந் தேதி தன் கையால் எழுதியுள்ள கடிதத்தை இப் பத்திரிகை ஆதாரமாகக் கூறுகிறது இப்பி பக்ரியின் படைகள் நேத்தாஜி வசமிருக்கின்றனவாம்.

## தானவரவு

வண் மேற்கு திரு. பூ. அமிர்தலிங்கம் அவர்களின் அந்தியேஷ்டியும், வீட்டுக் கிருத்தியமும் சென்ற வெள்ளிக்கிழமை (20-9-46)கீரிமலைத் தீர்த்தக் கரையிலும், அவரது இல்லத்திலும் முறையே சிறப்பாகச் செய்யப்பட்டன; அச் சமயத்தில், அவருடைய பிரிய பத்தினியார், யாழ்ப்பாணஞ் சைவ பரிபாலன சபைக்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபா 2 வரப்பெற்றும்.

மனேஜர்.


பண்டிதர்

ம. வே. திருஞானசம்பந்தப் பிள்ளையின்

## அறுபதாமாண்டு நிறைவு விழா நிதி

இந் நிதிக்குப் பணமுதவுவோரின் பெயர், விலாசம், பணத் தொகை முதலியன:-

திருவாளர்கள்:

| | | ரூ. | ச |
|---|---|---|---|
| | முன்கணக்குப்படி | 690 | 00 |
| V | பொன்னம்பலவாணர் கொக்குவில் | 5 | 00 |
| K P | ரத்தினம் வெள்ளவத்தை | 10 | 00 |
| க | திருச்சிற்றம்பலம் வல்வெட்டித்துறை | 5 | 00 |
| K. | கனகரத்தினம் பம்பலப்பிட்டி | 25 | 00 |
| டக்ரர் C. | சிவசிதம்பரம் கொழும்பு | 10 | 00 |
| V. | விசுவலிங்கம் கேகாலை | 10 | 00 |
| | ஆக | 755 | 00 |

மேற்படி பண்டிதரவர்களின் மாணக்கர்கள் அபிமானிகளா யுள்ளாரனைவரும் இந் நிதியின் பொருட்டுத் தம்மால் இயன்ற பணம் உதவுக. மேலும் பணம் உதவும் அன்பர்கள் தம் பெயர் விலாசமென்னு மிவைகளைத் தெளிவாக எழுதி மேற்படி நிதித் தனதிகாரியவர்கள் விலாசத்திற்கனுப்புக.

கா. கந்தையா, தலைவர். க. சி. சுப்பிரமணியம், காரியதரிசி. அ. கனகசபாபதி, தனதிகாரி,

ஷை பண்டிதரின் சஷ்டியப்தபூர்த்திச் [illegible]

Mis 131 13-9-46


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 400, 000, 00 |

**தலைமைக்காரியாலயம் -** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, கொழும்பு, கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை.

**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.


**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு. லண்டன் ஏஜெண்டுகள் பார்க்கிளேஸ் வங்கி.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்

ஸி. லோகநாதன்,
ஏஜெண்டு, யாழ்ப்பாணக்கிளை.

(Mis 137 2-8—31-7-47)

மிகச் சிறந்த புதிய **ஆர்மோனியங்கள்**




விலைக்கிருக்கின்றன

**எந்த சீதோஷ்ண காலத்திலும் பாவிக்கலாம்**

சங்கீதக் கருவிகள் உத்தரவாதத்துடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும்

**கல்கத்தா மோகன புளூட் ஆர்மோனியக் கொம்பனி.**
484 K K S ரோட், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

(Mis 98 28 6—28-9) (வெ)




இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:

எங்கும் கியாதிபெற்ற எமது

**ரேடியோ பீடிகளையே**

எப்பொழுதும் உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள்.

எல்லாஊர்களிலும் கிடைக்கும்
**மொடேண் ஏஜென்சீஸ்,**
சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)


## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### சனி செப் 28

காலை: 7-15 கிதாரம்பம் 7-20 தமிழிற் செய்திகள் 7-30 கே ஜயராமய்யர் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 எம் ஆர் சர்மாம்பாள் பாட்டு 8-30 சித்ரகானம 9 முடிவு.

1 கே வி ஜயராமய்யர் வயலின் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்லூரிக் குறிப்பு 2-15 என் ஆர் பி ஐயர் பாட்டு 2.45 முடிவு.

மாலை 5 என் ஆர் பி ஐயர் பாட்டு 5-40 அர்புத திருவந்தாதிவிளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 எம் ஆர் சர்மாம்பாள் பாட்டு 7-15 வீடுகள் வேண்டாமா? 7.20 தமிழில் செய்திகள் 7-45 மதராசில் உள்ளபடி (எஸ் வி பார்த்தசாரதி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 பதம் ஜாவளி பாட்டு 9-30 லண்டனிலிருந்த செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 இசைவேளை 10.30 முடிவு.

### ஞாயிறு செப் 29

காலை: 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 திருவாரூர் பி ஆர் சிலம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 நாகஸ்வர இசை இசைத்தட்டு 8-30 ஆர் குருமூர்த்தி பாட்டு 9 முடிவு

12 கதம்பம் 12-30 அவை பேசுமனை 12-45 மைன இசைநிகழ்ச்சி 1 மணிமலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பெண் உலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 பின்னிசை 2-30 நீங்கள் கேட்டவை 3 முடிவு

மாலை: 5 ஏ ராமகிருஷ்ணன் பாட்டு 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருவாரூர் பி ஆர் சிலம் பாட்டு 7.15 ஆகாரமனைவை 7.30 தமிழில் செய்திகள் 7-45 டி ஆர் நவனீதம் புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ரேடியோ நாடக இசை 9.30 லண்டனிலிருந்த செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஏ ராமகிருஷ்ணன் பாட்டு 10-30 முடிவு.

### திங்கள் செப் 30

காலை 7 15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 நாகபட்டணம் பி எஸ் ஜி எம் சிவசுப்பிரமணிய பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிய பாடல்கள் 8.30 ஆர் ஜ லக்ஷ்மி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 நீடாமங்கலம் ஜி கிருஷ்ணமூர்த்தி ஐயர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 நீடாமங்கலம் ஜி கிருஷ்ணமூர்த்தி ஐயர் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு

மாலை 5 நாகபட்டணம் பி எஸ் ஜி எம் சிவசுப்பிரமணியபிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7.15 பரிமாறல் 7.30 தமிழில் செய்திகள் 7-45 என் வி வசந்தகோகிலம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 கே ஜே ஜேஸ் திருபா 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 இசைவேளை 10-30 முடிவு.


## ஜீவாதார வைத்திய விளம்பரம்

நாடிப் பரீட்சையுடன்
3 நாள் 6 வேளை மருந்து 10 ரூபா
ஒருமனதுடன் வந்து
நற்சுகத்தைப் பெறுங்கள்

பித்தம், மேகச்சூடு, சலரோகம், இருமல், தொய்வு ஏனைய காய்ச்சல் ரோகங்களும் மருந்து அருந்திய நேரந் தொடங்கி வருத்தம் காண்பியாது நற்பலனைக் கொடுக்கும். எந்த ரோகிகளும் தங்கள் இரத்தம் சுத்தமாகும் வரை மருந்து அருந்தி வரவேணும்.

இங்ஙனம்,
க. த. அப்பாத்துரை.
சுதேசவைத்தியர்
தாவடி வடக்கு, கொக்குவில்,
(Mis 160 30-8—30-11-46)

## தந்தரோகசஞ்சீவி
கந்தசாமி வைத்தியர்
## சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியக்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா மூலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 27 26 4-46—25-10-46 (வெ)

## பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**
இ. 156, செக்கடித்தெரு கொழும்பு
Mis 25 23-4-46 to 22-3-47)


விளம்பரமின்றேல்
பெரும்பணமில்லை

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday September, 27, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org